பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 08 சனிக்கிழமை 23.11.2024 | அதிர்வு 114

## உயர்தரப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

ஜி.சீ.ஈ. உயதரப் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது தயார் நிலையில் இருக்கின்றன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

02 ▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வடக்கில் உள்ள சில கிராமங்கள் அரசியல் ரீதியாகப் புறக்கணிப்பு

## ஆளுநர் வேதநாயகன் ஆதங்கம்

"வடக்கு மாகாணத்தில் சில கிராமங்கள் அரசியல் ரீதியாகவும், பல்வேறு காரணங்களுக்காகவும் புறக்கணிக்கப்படுகின்றன. அவற்றை அடையாளம் கண்டு முன்னேற்ற வேண்டும்."

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்றுறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் மீளாய்வுக்கூட்டம் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

02 ▶



# யாழில் பெண் சட்டத்தரணி வீட்டில் திருட்டு!

## ஒரு கோடி 40 இலட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம் களவாடிய இருவர் சிக்கினர்





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் சட்டத்தரணி ஒருவரின் வீட்டில் ஒரு கோடி 40 இலட்சம் ரூபா பெறுமதியான நகை மற்றும் பணம், பொருட்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சியில் பதுங்கியிருந்த ஒருவரும், குறித்த வீட்டில் பணியாற்றிய பணிப்பெண்ணுமே யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெண் சட்டத்தரணி ஒருவர் வீட்டில் இல்லாத சமயத்தில் 40 பவுண் நகை, பணம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன களவாடப்பபட்டன.

02 ▶

# பதுளை விபத்தில் காயமடைந்த பல்கலை மாணவன் உயிரிழப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

களப்பயிற்சிக்காகச் சென்ற வேளையில் பஸ் தடம்புரண்டதனால் ஏற்பட்ட விபத்தில் படுகாயம் அடைந்த சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் 23 நாட்களின் பின் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 2019 ஆம் ஆண்டு கணிதப் பிரிவு மாணவனான கைலைநாதன் சிந்துஜன் என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த முதலாம் திகதி கொழும்பிலிருந்து பதுளைக்குக் களப்பயிற்சிக்காகச் சென்று கொண்டிருந்த வேளை பதுளை - மகியங்கன வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ் தடம்



புரண்டதனால் இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் நான்கு பேர் உயிரிழந்திருந்தனர். பஸ்ஸில் சென்ற சாரதி உட்பட 36 பேர் காயமடைந்திருந்தனர். காயமடைந்தவர்கள் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். அவர்களில் படுகாயமடைந்திருந்த 6 பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

படுகாயமடைந்திருந்த கைலைநாதன் சிந்துஜன் கடந்த வாரம் பதுளை வைத்தியசாலையில் இருந்து இரத்மலானையில் அமைந்துள்ள பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். இன்று அதிகாலை 5:30 மணியளவில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

இவருடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழில் பெண்...

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில்

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் அத்தியட்சர் எம்.எஸ்.ஜரூல் வழிகாட்டலில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சமன் பிறேமதிலக தலைமையிலான குழுவினர் மேற்படி சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்தனர்.

சட்டத்தரணி இல்லாத நேரம் தொடர்பாக பிரதான சந்தேக நபருக்கு வீட்டுப் பணிப்பெண் வழங்கிய தகவலுக்கமைய குறித்த களவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களைக் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### உயர்தர...

நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் நடைபெறவுள்ள பரீட்சைக்காக 6 நாட்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள் இன்று பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### வடக்கில் உள்ள...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளிட்ட தேவையுடைய மக்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கும்போது அவர்களுக்கு காணி இல்லை என்பதைக் காரணம் காட்டி வீடுகளை வழங்காமல் விட வேண்டாம். காணிகளை அவர்களுக்குக் கண்டறிவதற்குரிய ஒழுங்குகளை நாங்கள் முன்னெடுப்போம்.

கடந்த காலங்களைப் போன்று பனைசார் உற்பத்திப் பொருட்களின் உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக சில ஆலயங்களில் பின்பற்றப்படுவதைப் போன்று பனைஓலையிலான அர்ச்சனைப் பெட்டிகளை ஊக்குவிக்க வேண்டும்.” - என்றார்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் ந.திருலிங்கநாதன் கருத்துத் தெரிவிக்கையில்,

“வடக்கு மாகாண பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்கள் கள்ளை உற்பத்தி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கும், உற்பத்தி வரியாகவும் அரசுக்குப் பல மில்லியன் ரூபாவைச் செலுத்தியுள்ளன. அதே போன்று 2 தனியார் நிறுவனங்கள், பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து போத்தல் கள்ளை கொள்வனவு செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் ஊடாக பல இலட்சம் டொலரை நாட்டுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளன.

கூட்டுறவுத் திணைக்களம் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக சங்கங்களுக்கு 6 சதவீத வட்டிக்குக் கடனை வழங்குகின்றன. அதனை அவர்கள் மக்களுக்கு ஆகக்கூடியது 15 சதவீதம் வரைக்கும் வழங்க முடியும். ஆனால், வடக்கில் சில சங்கங்கள் வேறு சமாசங்களிடமிருந்து 15 சதவீத வட்டிக்குக் கடனைப் பெற்று அவற்றை மக்களுக்கு 21 சதவீதம் வரைக்கும் வழங்குகின்றன. இது வடக்கு கூட்டுறவுத்துறைக்குச் சவாலாக இருக்கின்றது.” - என்றார்.

இதன்போது வடக்கு ஆளுநர், அவ்வாறான நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது எனவும், கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் பணித்தார்.

சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் செல்வி அகல்யா செகராஜா, திணைக்களத்தின் பல்வேறு வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அவற்றுக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

மேலும், பணிப்பாளர், தம்மிடம் பல்வேறு உதவிகளைக் கோரி மக்கள் வருவதாகவும், ஆனால் தமது எல்லைக் குட்பட்டு அவர்களுக்குரிய உதவிகளைச் செய்ய முடியாத நிலைமை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறானவர்களுக்கு நன்கொடையாளர்களின் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்து உதவிகளைச் செய்ய முடியும் என்றும், அவ்வாறு உதவி கோரி வருபவர்களின் விவரங்களை வழங்குமாறும் ஆளுநர் குறிப்பிட்டார்.

மேலும், வடக்கு மாகாணசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில், நலனோம்பு மன்றம் ஒன்றை உருவாக்கி அதன் ஊடாக உதவிகளைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்றும், அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் வடக்கு மாகாண பிரதம செயலர் தெரிவித்ததுடன் அதற்கு ஆளுநர் அனுமதி வழங்கினார்.

# யாழில் உயிருடன் பிடிபட்ட முதலை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கச்சேரி-நல்லூர் மூத்தநாயினார் கோயில் பகுதியில் வீதிக்கு வந்த முதலையொன்று இன்று உயிருடன் பிடிபட்டது.

வீதியோரமாக உயிருடன் முதலை இருக்கின்றது என்று பொதுமக்கள் தகவல் அளித்த நிலையில், வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் முதலை பிடிக்கப்பட்டு கொண்டுசெல்லப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிலவி வரும் மழையுடனான வெள்ளப்பெருக்கு காரணமாக அருகில் உள்ள குளத்தில் இருந்த முதலை வீதிக்கு வந்தது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.





## சட்டவிரோதமான முறையில்

# மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்ட 9 பேர் சிக்கினர்

(க.கிஷாந்தன்)

மாவெளி வனப்பகுதியில் பாரிய சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தி சட்ட விரோதமான முறையில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காசல்ரீ நீர்த்தேக்கத்துக்குப் பிரதானமாக நீர் வழங்கும் பொகவந்தலாவ மாவெளி வனப்பகுதியில் பாரிய சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 9 சந்தேகநபர்களை நுவரெலியா மீபிலிமான பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று கைது செய்துள்ளனர்.

மேற்படி சந்தேகநபர்கள் சட்ட விரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு பெரும் சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தினர் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது மாணிக்கக்கல் அகழ்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பல உபகரணங்களும் கைப்பற்றப்பட்டு பொகவந்தலாவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பலாங்கொடை மற்றும் பொகவந்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், மேலும் இவ்வாறான சுற்றிவளைப்புகள் தொடரும் எனவும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

# நாங்கள் இனியாவது ஒன்றுபட வேண்டும்!

## வவுனியாவில் செல்வம் எம்.பி. தெரிவிப்பு



(கி.வசந்தன்)

“நாங்கள் ஒன்றிணைந்தால் தாங்கள் எங்களோடு நிற்பார்கள் என்பதைத் தேர்தல் மூலம் மக்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இனியாவது ஒன்றுபட வேண்டும்.”

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் அவரது அலுவலகத்தில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் போது தேசிய மக்கள் சக்தி மீது மக்கள் அதிக நம்பிக்கை வைத்திருப்பதாகத் தெரிகின்றது. வடக்கு – கிழக்கிலும் அந்த அலை பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் நிலை உள்ளது. மக்களின் எதிர்பார்ப்பை இந்த அரசு தீர்க்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. அதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரையில் தேசிய இனப் பிரச்சனை தொடர்பாக பேசாமை வருத்தமளிக்கின்றது. விவசாயிகள், கடற்றொழிலாளிகள், ஏழை மக்களின் பொருளாதாரம் தொடர்பாக அவரால் சொல்லப்பட்ட கருத்தை வரவேற்கின்றேன். அனைவரும் இலங்கையர்கள் என்ற அடிப்படையிலேயே அவரது செயற்பாடு இருக்கின்றது.

எங்களைப் பொறுத்த வரை நாம் பல விலைகளைக் கொடுத்திருக்கின்றோம். எனவே, இனப் பிரச்சினை விடயத்தில் அரசு என்ன நிலைப்பாட்டில் உள்ளது என்பதைத் தெளிவாகக் கூறவேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்போது 13 ஆவது திருத்தமும் இல்லாமல் செய்யப்படும் என்ற நிலை வரலாம் எனக் கூறப்படுகின்றது. எனவே, நல்ல விடயங்களை ஆதரிப்போம். மக்களுக்கு அநீதி இழைக்கப்படும் நிலை தொடர்ந்தால் அதனை நாம் கடுமையாக எதிர்ப்போம்.

நாங்கள் ஒற்றுமையாக இருந்திருந்தால் இந்த ஆசனங்கள் தேசிய மக்கள் சக்திக்குச் சென்றிருக்காது. தமிழ்க் கட்சிகளுக்கு விழுந்த வாக்குகளைப் பார்த்தால் அது புலப்படும். நாடாளுமன்றத்தில் தனித்தனியாக நாங்கள் செயற்பட முடியாது என்பது எனது கருத்து. பொதுவான விடயத்தில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். அதன் மூலமே பல விடயங்களை நாம் சாதிக்க முடியும்.

நாங்கள் ஒன்றிணைந்தால் தாங்கள் எங்களோடு நிற்பார்கள் என்பதைத் தேர்தல் மூலம் மக்கள் சொல்லியிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் டக்ளஸ் மற்றும் அங்கயன் ஆகியோரது வாக்குகளே தேசிய மக்கள் சக்திக்குச் சென்றுள்ளன. தேசியத்தை நேசிக்கின்ற மக்களின் வாக்குகள் அவர்களுக்கு செல்லவில்லை.

எனவே, இனிவரும் காலங்களிலும் நாங்கள் ஒன்றிணையவில்லையெனில், வடக்கு – கிழக்கில் அரசு ஆளும் சந்தர்ப்பத்தை உருவாக்கிய தவறை நாங்கள் விட்டவர்களாக இருக்கப் போகின்றோம்.

அந்த நிலையை மாற்றி இனியாவது ஒன்றாகச் செயற்பட வேண்டும். நான் அதில் முனைப்புக் காட்டுகின்ற ஒருவன். மக்களும் அதையே எதிர்பார்க்கின்றனர்.” – என்றார்.

# குறிஞ்சாக்கேணி படகு விபத்து; இன்றுடன் மூன்று வருடங்கள்!

## பாலம் இன்னும் புனரமைக்கப்படவில்லை



(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை, கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்தில் மரணித்தவர்களின் மூன்றாவது வருட நினைவை முன்னிட்டு விசேட துஆ பிரார்த்தனை நிகழ்வு இன்று (23) கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச் .எம். கனி தலைமையின் கீழ் குறிஞ்சாக்கேணி பாலம் முன்றலில் இடம்பெற்றது.

இதன்போது கிண்ணியா நகர சபைச் செயலாளர், உலமா சபை சூறா சபை, கிண்ணியா பிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் உலமாக்கள், மதரஸா மாணவர்கள் உட்பட அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் படகுப் பாதை விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உள்ளடங்களாக பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணி தாய் ஒருவர் உட்பட சுமார் 08 அப்பாவி உயிர்கள் பலி போயிருந்தன.

இந்தப் பாலத்தின் ஊடாகத் தினமும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் அரச அதிகாரிகள் பலரும் பயணம் செய்து வருகின்றனர். பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழும் நிலையில் உள்ளது.

எனவே இது விடயமாகத் தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர அண்மையில் விஜயம் செய்து பார்வையிட்டார். மேலும் ஆளும் கட்சியில் திருகோணமலை மாவட்டம் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை பிரதியமைச்சர் அருண் கேமச்சந்திர இந்தப் பாலத்தில் பால புனரமைப்பு நிதி ஒதுக்கீடு தொடர்பிலான ஊடக சந்திபபு ஒன்றையும் கடந்த காலத்தில் முன்வைத்திருந்தார்.

எனவே அனுர குமார அரசில் இதனை முழுமையாக புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.









# மாவீரர் நடுகல் வழிபாடு சுவிஸில்

தமிழீழத் மாவீரர் நினைவு சுமந்து, மாவீரர் வாரத்தின் தொடக்க நாளன்று சுவிஸ் நாட்டில் மாவீரர் நினைவுக்கல் அமைந்துள்ள லவுசான் மாநிலத்தின், வர்டோன் நகரில் நடுகல் வழிபாடு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சுவிஸ் நாட்டில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்ற நடுகல் வழிபாடு தமிழீழ விடுதலைக்காகவும், தமிழர்களின் சுதந்திர வாழ்வுக்காகவும் தம்மை முழுமையாக அர்ப்பணித்து, இறுதி வரை களமாடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களை நினைவேந்தும் வகையில் சுவிஸ் நாட்டின் லவுசான் மாநிலத்தின இவர்டோன்நகரில்அமைக்கப்பெற்றுள்ள மாவீரர் நினைவுக் கல்லுக்கான நடுகல் வழிபாடு நடைபெற்றது.

,ந்நிகழ்வில் உறவுகளும் உணர்வாளர்களும் மாவீரர் கலந்துகொண்டனர்.

இந்த ஆண்டுக்கான தமிழீழத் தேசிய மாவீரர் நாள் எதிர்வரும் 27 அன்று 12.30 மணிக்கு பாசல் மாநிலத்தின் உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

மாவீரருக்கு வணக்கம் செலுத்தி, உறுதி எடுக்க தமிழின உணர்வாளர்கள் அனைவரையும் அணி திரண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

# கற்பிட்டியில் இரத்ததான முகாம்

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

சிலோன் தவ்ஹீத் ஜமாஅத் கற்பிட்டி கிளை 10 ஆவது தடவையாக மேற்கொள்ளும் மாபெரும் இரத்ததான முகாம் நாளை (24) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் நடைபெறவுள்ளது.

உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் என்ற இந்த நிகழ்வில் சகலரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.



# மட்டு. வின்சென்ட் ஆசிரியை கிரிக்கெட் நடுவராக நியமனம்!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் தேசிய பாடசாலை உடற்கல்வி ஆசிரியை எமா குளோரியா கிழக்கின் முதல் பெண் கிரிக்கெட் நடுவராக நியமிக்கப்பட்டுள்ளார் .

பாடசாலை அதிபர் திருமதி தவத்திருமகள் உதயகுமார் தலைமையில் ஆசிரியரைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை குறொப்ற் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினர் தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் பரவணிப் பல்லவி

“வடக்கு மக்கள் இனவாதம், பிரிவினவாகத்தை முடிவுக்கு கொண்டு வந்து, தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்து உள்ளார்கள். எனவே பிரிவினைவாதத்தைத் தூண்டும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் நோக்கங்களுக்கு அமைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க செயற்படக்கூடாது.”

- இவ்வாறு தத்துவம் பேசத் தொடங்கி இருக்கின்றது விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி கட்சி. அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர இதனை வலியுறுத்தி உள்ளார்.

நாட்டு மக்களின் கருத்து நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை, ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை அடுத்து நான்கு புரிந்து கொண்ட விமல் வீரவன்ஸவின் அணி மெல்லத் தேர்தலில் இருந்து ஒதுங்கி, எதிர்கொள்ள வேண்டிய தோல்வியை முகம் கொள்ளாமல் தவிர்த்துக் கொண்டது.

இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழலில், அரசியல் ஆதாயம் ஈட்டுவதற்காக மீண்டும் பேரினவாதக் கொக்கரிப்பைத் தொடங்கி இருக்கின்றது அக்கட்சி. அதனையே அத்தரப்பின் இப்போதைய அறிவிப்பு வெளிப்படுத்தி நிற்கிறது.

தமிழர் தரப்புக் கோரும் சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வு என்பது பிரிவினைக்கான வழிமுறை அல்ல. மாறாக, நாட்டின் ஐக்கியத்தை உறுதிப்படுத்தும் முக்கியமான கட்டமைப்பு மாற்றமே அதுவாகும்.

அதனை சிங்கள மக்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கும் விதத்தில் இதுவரை காலமும் பேரினவாதத்தைக் கிளப்பி, சிறுபான்மையினரை அடக்குமுறைக்கு உட்படுத்தும் ஒற்றை ஆட்சி முறையை வலியுறுத்தி நின்ற பௌத்த - சிங்களப் பேரினவாத வெறிப்போக்கு அமைப்புகளில்விமல்வீரவன்ஸவின்தரப்பு முக்கியமானது.

இந்தத் தடவை பொது தேர்தலை எதிர்கொள்வதை புத்திசாதுரியமாகத் தவிர்த்துக் கொண்டதன் மூலம், மக்களினால் படுதோல்வியின் மூலம் அரசியல் குப்பைக் கூடைக்குள் தூக்கிக் கடாசப்படுவதைத் தவிர்த்துக் கொண்ட அக்கட்சி, தனது பரவணிப் பல்லவியை மீண்டும் இப்போது தொடங்கி விட்டது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது, மாகாண சபைத் தேர்தலை நடத்துவது, தமிழர் தேசத்தின் இனத்துவ குடிப்பரம்பலை குழப்பாமல் அங்கீகரித்துச் செயற்படுவது போன்றவை பிரிவினைவாதம் என்று ஊளையிடும் பெரும் தேசியவாதத் தரப்பினர், தெற்கில் வீசிய அநுர அலையில் அடிபட்டு போய்விட்டனர் எனக் கருதப்படும் சூழலில், மீண்டும் துளிர்த்து எழ முற்படுகின்றது அந்த பேரினவாதம் என்பதை விமல் அணியின் இந்த இனவாதக் கூக்குரல் உறுதிப்படுத்துகிறது.

இந்த நாட்டில் நல்லிணக்கமும் இன சௌஜன்யமும் புரிந்துணர்வும் நிலை பெற வேண்டுமானால் பேரினவாதத்தைக் கக்கும் இத்தகைய இனவெறி மேலாதிக்க சக்திகள் மீண்டும் முளைவிட்டு, அகலக் கால் பரப்ப இடமளிக்காமல் ஆரம்பத்திலேயே அவை ஒட்ட நறுக்கப்பட வேண்டும்.

தமக்கு கிடைத்த வெற்றியையும், நாடு தழுவிய ஆதரவையும், இந்த நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும், நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய நீதியான தீர்வையும் காண்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசு பயன்படுத்த வேண்டுமானால், அதற்கு இடைஞ்சலாக கிளம்பக் கூடிய பௌத்த பேரினவாத பல்லவிகளை - குறிப்பாக பழைய பேரினவாத சக்திகளை - அடையாளம் கண்டு, அவற்றை முளையிலேயே அடக்குவது புதிய அரசின் முக்கிய பொறுப்பாகும்.

தென்னிலங்கையில் அத்தகைய சக்திகள் மத்தியில் சேர்ந்து வளர்ந்த ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்திக்கு அத்தரப்புகளை அடையாளம் காண்பதும், உரிய முறையில் கையாள்வதும் புதிய விடயங்கள் அல்ல.

இணக்கமான - புரிந்துணர்வுள்ள - அமைதியான - நின்று, நிலைக்கக் கூடிய - நீதியான - தீர்வு ஒன்று கிட்ட வேண்டும் என்று புதிய அரசுத் தலைமை நினைக்குமானால் இத்தகைய சக்திகளை ஆரம்பத்திலேயே அடக்குவதும் கட்டுப்படுத்துவதும் முக்கியமானதாகும்.





# திருமலை விபுலானந்தா கல்லூரியில் அரச அதிபர் தலைமையில் சிரமதானம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலையில் அமைந்துள்ள விபுலானந்தா கல்லூரியில் நேற்று (22) சிரமதான நிகழ்வானது திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் இடம்பெற்றது.

இக்கல்லூரியானது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தலின் போது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தமைக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக 6 வகுப்பறைகளுக்கு வர்ணப் பூச்சுகள் பூசப்பட்டன.

இந்தச் சிரமதான பணிகளில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.சசீலன், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.












# ஸ்ரீசத்ய சாயி பாபாவின் 99 ஆவது ஜனன தினம்

ஸ்ரீசத்ய சாயி பாபாவின் 99 ஆவது ஜனன தின பெருவிழா இன்று (23) கொழும்பு-13 புதுச் செட்டித் தெரு, சாயி நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது சாயி நிலையத் தலைவர் எஸ். என். உதயநாயகம் பிரசாந்தி கொடியேற்றி வைத்தார்.

நண்பகல் 12 மணிக்கு பிறந்தநாள் கேக் வெட்டப்பட்டது. தொடர்ந்து மங்கள ஆராத்தியும் இடம்பெற்றது.




Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555






# சமூக நல்லிணக்கத்துக்கு மாவட்ட இளைஞர் மாநாடு

(பாறுக் ஷிஹான்)

வன்முறை சிந்தனையை இளைஞர்கள் மத்தியில் இல்லாதொழித்து சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் கப்சோவால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு வருட செயற்றிட்டத்தின் மாவட்ட மட்ட மாவட்ட நிகழ்வு இன்று (23) சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட ரீதியில் அமுல்படுத்த இந்த நிகழ்வானது கப்சோ நிறுவனத்தின் பணிப்பாளர் காமில் இம்டாட் தலைமையில் இடம் பெற்றது.




வன்முறைகளை தவிர்க்கும் இளைஞர்கள் எனும் தொனிப்பொருளிலான வீதி நாடகம் ஒரு வருட காலமாக செயற்பட்டு வந்த 300இற்கு மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் ஊடக இளைஞர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட கண்காட்சி கூடாரங்கள் என்பனவற்றின் மூலம் சிறப்பித்து பயிற்சி நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜெகராஜன், சிறப்பு அதிதியாக சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, அம்பாறை, தமன மற்றும் அக்கரைபற்று பிரதேச செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலக இளைஞர் மன்ற செயற்பாட்டாளர்கள் உட்பட ஹெல்விடாஸ் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# விசேட தேவையுடையோரின் உற்பத்திப் பொருள் கண்காட்சி





( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் கரித்தாஸ், வாழ்வோதயம் நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்ட 'நாமும் சாதனையாளர்கள்' என்ற தொனிப் பொருளில் விசேட தேவையுடையோர்களின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி மற்றும் சந்தைப் படுத்தல் நிகழ்வு மன்னாரில் இடம் பெற்றது.

நேற்று வெள்ளிக்கிழமை (22) மன்னார் நகர சபை மண்டப பகுதியில் வாழ்வோதய இயக்குனர் அருட்பணி ஜே.ஏ.அருள்ராஜ் குரூஸ் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் இது நடைபெற்றது.

இதில் பிரதம மற்றும் கௌரவ விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் மற்றும் மன்னார் மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கிறிஸ்துராஜா ஆகியோர் கலந்து கொண்டு விசேட தேவையுடையோர்களின் உற்பத்திக் கண்காட்சி மற்றும் சந்தைப்படுத்தலை சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தனர்.

அத்துடன் இந்த நிகழ்வில் வங்கியாளர்கள் மற்றும் பல முக்கியஸ்தர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் விசேட தேவையுள்ள சிறுமிகளின் நடனங்கள், வன்னி கரித்-தராஸ் - கியூடெக் விசேட தேவை கல்வி ஆசிரியர்களின் நடனம் ஆகியவை விசேட நிகழ்வுகளாக இடம்பெற்றன. மன்னார் வாழ்வோதயத்தில் நீண்டகால பணியாளராக கடமைபுரிந்துள்ள யோகம் இதன்போது கௌரவிக்கப்பட்டார்.

இங்கு இடம்பெற்ற சந்தைப்படுத்தலில் மாற்றாற்றல் உடையோர் மற்றும் சிறுகைத்தொழில் செய்யும் பெண்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனையும் செய்யப்பட்டன.

# ஆயுள்வேத வைத்திய முறையூடாக நீரிழிவற்ற நாட்டை உருவாக்குவோம்

(நூருல் ஹுதா உமர்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சு, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றின் வழிகாட்டலின் கீழ் நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை ஏற்பாடு செய்த உலக நீரிழிவு தினம் - 2024 விசேட நிகழ்வு நேற்று (22) இடம்பெற்றது.

ஆயுள்வேத - யுனானி வைத்திய வாழ்க்கை முறையூடாக நீரிழிவு நோயற்ற நாட்டை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன், நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம். அப்துல் லத்தீப், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளர் டாக்டர் எம்.ஏ.நபீல், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல். ரைஸ் உள்ளிட்ட வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.











குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# வயநாடு இடைத்தேர்தல் முடிவுகள்: முன்னிலையில் பிரியங்கா காந்தி



வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் பிரியங்கா காந்தி அமோக வெற்றியை நோக்கி முன்னேறி வருகிறார்.

வயநாட்டில், இன்று மத்திய நில வரப்படி காங்கிரஸ் வேட்பாளர் பிரியங்கா காந்தி 343340 வாக்குகள் பெற்று முன்னிலை வகிக்கிறார்.

வயநாடு மக்களவை தொகுதிக் கான இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் பிரியங்கா காந்தி போட்டியிட, அவரை எதிர்த்து பா.ஜ.க. சார்பில் நவ்யா ஹறிதாஸ், இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சத்யன் மொகேரி போட்டி யிட்டனர். சத்யன் மொகேரி 118009 வாக்குகளும், பா.ஜ.கவின் நவ்யா 65136 வாக்குகளும் பெற்றுள்ளனர்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி 2024 நாடாளுமன்றத் தேர்தலில் வயநாடு மற்றும் ரேபரேலி தொகுதிகளில் போட்டியிட்டு, 2 தொகுதி களிலும் வெற்றி பெற்றார். ஒருவர் 2 தொகுதிகளில் எம்.பி பதவி வகிக்க முடியாது என்பதால், வயநாடு எம். பி பதவியை இராஜினாமா செய்தார். ரேபரேலி தொகுதியில் ராகுல் காந்தி எம்.பி-யாக நீடிக்கிறார்.

இதையடுத்து, இந்திய தேர்தல் ஆணையம் மகாராஷ்டிரா, ஜார்கண்ட் மாநிலங்களுக்கான சட்டப்பேரவை தேர் தல் திகதியுடன் இந்தியாவில் வெற்றிட மாக உள்ள மற்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் திகதியையும் அறிவித் தது. அதன்படி, வயநாடு மக்களவைத் தொகுதிக்கான தேர்தல் நவம்பர் 13 ஆம் திகதி நடைபெற்றது.

1999 ஆம் ஆண்டு அமேதியில் பா.ஜ.க. வேட்பாளர் அருண் நேருவுக்கு எதிராக தனது தாயார் சோனியா காந் திக்காக பிரச்சாரம் செய்ய அரசியல் களத்துக்குள் நுழைந்தார் பிரியங்கா காந்தி. தொடர்ந்து அவர் தேர்தல் அரசி யலுக்கு வருவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வயநாட்டில் போட்டியிட்டு வெற்றியை நோக்கி முன்னேறி வருகி றார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, மகாராஷ்டிரா, ஜார்க் கண்ட் என இரண்டு மாநில சட்டப் பேரவைத் தேர்தலோடு நாடு முழுவதும் 14 மாநிலங்களை சேர்ந்த 48 சட்டப் பேரவைத் தொகுதிகளில் இடைத்தேர் தல் நடத்தப்பட்டது.

அதன்படி, உத்தர பிரதேசத்தில் 9, இராஜஸ்தானில் 7, மேற்குவங்கத்தில் 6, அசாமில் 5, பிஹார், பஞ்சாபில் தலா 4, கர்நாடகாவில் 3, கேரளா, மத்திய பிரதேசம், சிக்கிமில் தலா 2 தொகுதிகள், குஜராத், உத்தராகண்ட், மேகாலயா, சத்தீஸ்கரில் தலா ஒரு சட்டப்பேரவைத் தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

உத்தரப் பிரதேசத்தில் 9 தொகுதிக ளில் 6 இல் பா.ஜ.க. முன்னிலை வகிக் கிறது. மேற்குவங்கத்தில் 6 தொகுதி களிலுமே ஆளும் திரிணமூல் காங்கி ரஸ் கட்சி முன்னிலை வகிக்கிறது.

# த.வெ.க. மாவட்ட செயலர் பட்டியலை ஜனவரி மாதத்தில் வெளியிடத் திட்டம்



தமிழக வெற்றிக் கழகத்தில் மாவட்டச் செயலாளர்களை விரைவாக நியமிக்க அக்கட்சியின் தலைவர் நடிகர் விஜய் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, தினமும், ஒவ்வொரு மாவட்டமாக நிர்வாகிகள் கூட்டத்தைக் கூட்டி, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை நிர்வாகிகள், அணி தலை வர்களிடம் கருத்து கேட்டு மாவட்டச் செயலாளர்களை தேர்வு செய்யும் பணியை அக்கட்சியின் பொதுச் செய லாளர் ஆனந்த் மேற்கொண்டு வரு கிறார்.

பெரும்பாலும், விஜய் மக்கள் இயக் கத்தில் மாவட்டத் தலைவர்களாக இருந்தவர்களில், சிறப்பாக கட்சி பணி செய்தோருக்கு மாவட்டச் செயலாளர் பதவியில் முன்னுரிமை அளிக்கப்பட இருப்பதாக கூறப்படுகிறது. அதன்படி மாவட்டச் செயலாளர் பட்டியலும் தயார் செய்யப்பட்டு வருகிறது.

எனவே, ஜனவரி முதல் வாரத்தில், த.வெ.க. மாவட்டச் செயலாளர்கள் பட்டி யல் வெளியாகும் எனவும், 100 மாவட் டங்களாகப் பிரித்து மாவட்டச் செயலா ளர்கள் நியமிக்கப்பட இருப்பதாகவும் எந்தத் தொகுதி எந்த மாவட்டத்தில் இடம் பெற வேண்டும் என்ற பட்டியலும் தயா ரிக்கப்பட்டு வருவதாக கூறப்படுகி றது.

# உக்ரைனுக்கு எதிராகச் சக்திவாய்ந்த ஏவுகணைகளைப் பயன்படுத்துவோம்

## ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் எச்சரிக்கை



உக்ரைனுக்கு எதிராகச் சக்திவாய்ந்த ஏவுகணைகளைப் பயன்படுத்தவுள்ளோம் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் தெரிவித்துள்ளார்.

அந்த நாட்டு ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது உக்ரைனில் போர் நிலைமையை மேலும் மோசமாக்கும் எனவும் ரஷ்ய ஜனாதிபதி கூறியுள்ளார்.

முன்னதாக அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளின் ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் உக்ரைனின் டினிப்ரோ மீது ரஷ்ய புதிய ஏவுகணை தாக்குதல்களை நடத்தியிருந்தது.

இந்தநிலையிலும் மேலும் சக்திவாய்ந்த ஏவுகணைகளைப் பயன்படுத்தவுள்ளோம் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், உலக நாடுகளின் தலைவர்கள் இதற்குக் கடுமையான பதிலை வழங்க வேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமீர் ஷெலென்ஸ்கி கோரியுள்ளார்.

# உக்ரைனின் இராணுவ திட்டங்கள் அனைத்தும் முற்று முழுதாக பாதிப்பு

## ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு





உக்ரைனின் இந்த வருட இராணுவ திட்டங்கள் அனைத்தும் முற்று முழுதாக பாதிப்படைந்துள்ளன என ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் அன்ரி பெலோசோ தெரிவித்துள்ளார்.

ரஷ்யா நேற்று உக்ரைனின் இலக்குகளைக் குறிவைத்து புதிய ரக கண்டம் விட்டு கண்டம் பாயும் வலுவைக் கொண்ட ஏவுகணை தாக்குதலை நடத்தியதனை அடுத்தே அவர் இந்த கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

வட பிராந்திய யுத்தமுனையில் உள்ள இராணுவத்தினரைச் சந்தித்து உரையாடிய நிலையில், உக்ரைனுக்குள் ஊருடுவும் ரஷ்ய துருப்பினர் தமது முன்னேறும் நடவடிக்கைகளை தற்போது துரிதப்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யா பாரிய ஆயுதங்களைப் பிரயோகிப்பது குறித்து கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ள உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமீர் ஜெலென்ஸ்கி, இதனை உலக நாடுகள் அவதானிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், அனைத்து தரப்பினரும் அமைதியாகவும் நிதானமாகவும் செயல்பட வேண்டும் என ரஷ்யாவின் நட்பு நாடான சீனா கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் வழங்கிய நீண்டதூர ஏவுகணைகளை யுக்ரேன் பயன்படுத்தியதற்குப் பதிலடியாகவே நேற்று டினிப்ரோ நகரத்தின் மீதான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் தெரிவித்துள்ளார்.



# பிரான்ஸில் கடும் பனிப்பொழிவு; பல விமான சேவைகள் இரத்து!

பிரான்ஸில் கடுமையான பனிப் பொழிவு நிலவி வருவதனால் பல விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள் ளன.



பிரான்சின் பல நகரங்களில் போக்கு வரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக வும், சுமார் ஒரு லட்சம் வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக வும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாதுகாப்பு கருதி பல ரயில் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள் ளன என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரான்ஸில் வரும் வாரங்களில் அதிகளவில் பனிப்பொழிவு இருக்கும் என்றும் அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



பக்கங்கள் - 3

# கனடா முரசு

சனிக்கிழமை 23/11/2024

## கனடாவில் அகதிகளுக்கான தங்குமிடங்கள் கட்ட திட்டம்

கனடாவில், அகதிகள் மற்றும் புகலிடக்கோரிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவர்களுக்காக தற்காலிக தங்குமிடங்களை உருவாக்க அரசு திட்ட C2▶

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congres Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

## கனடிய தமிழர் பேரவை ஜனாதிபதிக்கு எழுதியிருந்த கடிதத்தில் இனவாத கருத்துக்களை முன்வைக்கவில்லை

### பேரவை தலைவர் குமார் இரத்தினம் தெரிவிப்பு

கனடிய தமிழர் பேரவை ஜனாதிபதி மற்றும் தேசிய மக்கள் சக்திக்கு அண்மையில் எழுதியிருந்த கடிதத்தில் இனவாத பிரிவினை வாத கருத்துக்கள் இருப்பதாக சொல்லப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கனடிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

கனடிய தமிழர் பேரவை போன்ற அமைப்புக்கள் இனவாத பிரிவினைவாத கோரிக்கைகளை முன்வைக்கின்றன என்ற விமல் வீரவன்சவின் கருத்துக்கள் கனடா முரசு இலத்திரனியல் பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

இந்த செய்திக்கு பதில் வாங்கும்போதே கனடிய தமிழர் பேரவையின் தலைவர் குமார் இரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், 02▶



## வான்கூவார் விமான நிலையத்தின் ஒரு ஓடு பாதை மூடப்பட்டது

கனடாவின் வான்கூவார் விமான நிலையத்தின் ஒரு ஓடு பாதை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சரக்கு விமானம் ஒன்று விபத்துக்குள்ளான காரணத்தினால் இவ்வாறு விமானத்தின் ஓடுபாதை ஒன்று மூடப்படுவதாக விமான நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது.

விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

எனவே விமானத்தின் ஓடுபாதையை புனரமைப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பது குறித்து தகவல் வெளியிடப்படவில்லை.

அதுவரையில் ஓடுபாதையை பயன்படுத்த முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.



## கனடாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிட்டு வருகிறது.

Ottawa நகரம், அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்காக தற்காலிக தங்குமிடங்களை உருவாக்க திட்டமிட்டுள்ள நிலையில், அவை தற்காலிட தங்குமிடமாகவும், மொழிப் பயிற்சி மற்றும் பணி உதவி ஆலோசனை மையமாகவும் செயல்பட இருக்கின்றன.

இந்த தங்குமிடங்கள், அகதிகள் சில வாரங்கள் தங்குவதற்காக மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளன. பின் அவர்கள் பொருத்தமான இடங்களில் தங்கவைக்கப்படுவார்கள்.

இப்படி அகதிகளுக்காக அரசு தற்காலிக தங்குமிடங்கள் உருவாக்க திட்டமிட்டுள்ள விடயம், சம்பந்தப்பட்ட பகுதியில் அக்கம்பக்கத்தில் வாழும் கனேடியர்களுக்கு கோபத்தை உருவாக்கியுள்ளது.

சொல்லப்போனால், உள்ளூர் மக்களுடைய எதிர்ப்பு காரணமாக, Ottawa நகரத்தில் அகதிகளுக்காக கட்ட திட்டமிடப்பட்டிருந்த முதல் தற்காலிக தங்குமிடம் ரத்து செய்யப்பட்டேவிட்டது.

ஆகவே, அதற்கு பதிலாக தற்போது வேறு இரண்டு இடங்களில் தற்காலிக தங்குமிடங்கள் உருவாக்க அரசு திட்டமிட்டுவருகிறது.

## கனடிய...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

“கனடிய தமிழர் பேரவை ஜனாதிபதி மற்றும் தேசிய மக்கள் சக்திக்கு அண்மையில் எழுதியிருந்த கடிதத்தில் இனவாத பிரிவினை வாத கருத்துக்கள் இருப்பதாக சொல்லப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அனைவரையும் உள்ளடக்கிய கொள்கைகளுடன் நீதி மற்றும் நியாயமான தீர்வுகளை முன்வைத்தே அந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த கோரிக்கைகள் இன மத வேறுபாடின்றி அனைத்து இலங்கையர்களும் தங்கள் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மதிக்கும் ஒரு சமூகத்தில் இணைந்து வாழ முடியும் என்பதை உறுதிசெய்யும் நோக்கத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் மிக நீண்ட காலமாக, இனவெறி மற்றும் பிரிவினைவாதத்தை தூண்டும் கருத்துக்கள் மக்களின் உணர்ச்சிகளைக் கையாளவும், சமூகங்களைப் பிளவுபடுத்தவும், குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு சேவை செய்யவும் ஆயுதமாக்கப்பட்டுள்ளது என்பதை நாங்கள் அறிவோம். இந்த தந்திரோபாயம் காலகாலமாக தவறான புரிதல்களை நிலைநிறுத்தியுள்ளது என்பதோடு அவநம்பிக்கையை வளர்த்து, இலங்கையின் சமூக மற்றும் கலாச்சார ஒற்றுமைக்கு நிரந்தரமான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இனவாதம் மற்றும் பிரிவினைவாதம் என்ற சொல்லாடல்கள் பல அரசியல்வாதிகளால் தங்கள் சொந்த நலனுக்காக பயன்படுத்தப்பட்டதையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் அனைவரும் அறிவர். இது போன்ற வார்த்தைகள் மக்களின் உணர்வுகளைத்தூண்டி இனங்களுக்கிடையில் அமைதியின்மையை ஏற்படுத்தி தங்கள் அதிகாரங்களை தக்கவைத்துக்கொள்ளவே பலரால் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இது போன்ற கருத்துக்களால் எந்த சாதாரண குடிமகனுக்கும் எந்த நன்மையையும் எப்பொழுதும் நேர்ந்ததில்லை. மாறாக சமூகங்களுக்கிடையில் பிளவுகளை ஆழமாக்கி உண்மையான பிரச்சனைகளில் இருந்து மக்களை திசைதிருப்பி அர்த்தமுள்ள முன்னேற்றங்களை தடுக்கின்றது. இனியும் இவ்வாறான கருத்தாடல்களால் மக்களை ஏமாற்ற நினைப்பதை தவிர்த்து முறையான முன்னேற்றகரமான அனைவரையும் உள்ளடக்கிய அரசியலில் ஈடுபடுவதே சிறந்தது என நாங்கள் குறிப்பிட விரும்புகின்றோம்.

கனடிய தமிழர் பேரவையினால் ஜனாதிபதிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் அனுப்பப்பட்ட கடிதத்தில் எந்த இனவாத தேசியவாத கருத்துக்களும் இல்லை என்பதையும் அவை நியாயமான, தசாப்தங்களாக தமிழ் மக்களால் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சனைகளுக்கான தீர்வாகவே அமைந்துள்ளது என்பதையும் நிலைநாட்டவிரும்புகின்றோம். உதாரணமாக,

- பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் (PTA): இந்தச் சட்டம் தமிழ் சமூகங்களுக்கு மட்டுமன்றி சிங்கள தனிநபர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெரும் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் தவறான பயன்பாடு தன்னிச்சையான தடுப்புக்காவல்களுக்கும் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கும் வழிவகுத்தது, அதை ரத்து செய்வது அனைவருக்கும் நீதியை நோக்கிய ஒரு அவசியமான நடவடிக்கையாக கருதப்பட வேண்டும்.

அரசியல் கைதிகளை விடுவித்தல்: பல நபர்கள் விசாரணையின்றி பல ஆண்டுகளாக தடுப்புக்காவலில் உள்ளனர். நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும் சட்டத்தின் கீழ் நியாயத்தை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களின் விடுதலை அவசியமாகும்.

காணி உரிமைகள்: வடக்கு மற்றும் கிழக்கில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தனியார் காணிகளை மீள அதன் உரிமையாளர்களிடமே கையளிப்பது என்பது சரியான உரிமையை மீட்டெடுப்பதோடு இடம்பெயர்ந்த குடும்பங்கள் அவர்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் உதவும். தமிழ் மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட சட்ட ரீதியாக அவர்களிற்கு உரிமையான காணிகளை திரும்பக்கோருதல் அவர்களின் உரிமை என்றே கருதப்பட வேண்டும்.

கலாச்சார மற்றும் மத வழிபாட்டுத் தலங்களை பாதுகாத்தல்: புனித தளங்கள் மற்றும் கலாச்சார அடையாளங்களை பாதுகாப்பது அனைத்து சமூகங்களின் அடையாளத்தை பாதுகாக்க மற்றும் பரஸ்பர மரியாதையை மேம்படுத்துவதற்கான முக்கியமான செயற்பாடாகும்.

பிராந்திய பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல்: 13 வது திருத்தம் போன்ற தற்போதைய அரசியலமைப்பு விதிகளை முழுமையாக செயல்படுத்துவதன் மூலம் அர்த்தமுள்ள பிராந்திய நிர்வாகத்திற்காக வாதிடுவது சமமான நிர்வாகத்தை நோக்கிய ஒரு படியாகும் அன்றி அது பிரிவினைவாதம் அல்ல.

இங்கு குறிப்பிடப்பட்டவை எவையும் பிரிவினைக்கான அல்லது இனவாதத்திற்கான கோரிக்கைகள் அல்ல; அவை உள்ளடக்கம் மற்றும் சமத்துவத்திற்கான அழைப்புகள். ஒரு தேசத்தின் பலம் அதன் அனைத்து குடிமக்களின் கவலைகளையும் நியாயமாக அங்கீகரித்து நிவர்த்தி செய்யும் திறனில் உள்ளது.

நியாயமான கோரிக்கைகளை மௌனமாக்குவதற்கும் சமூகப் பிளவுகளை ஆழப்படுத்துவதற்கும் பிரிவினைவாத, இனவாத முத்திரைகளும் குற்றச்சாட்டுகளும் பயன்படுத்தப்பட்ட கடந்த காலத்தின் அழிவுகரமான விளையாட்டுகளுக்கு அப்பால் நாம் நகர்வது இன்றியமையாதது. இத்தகைய அணுகுமுறைகள் நீடித்த துன்பத்தையும் தாமதமான முன்னேற்றத்தையும் மட்டுமே தருகின்றன. இனவாதம் மற்றும் பிளவுபடுத்தும் அரசியல் உத்திகள் சமூகத்திற்குள் விரிசல்களை ஆழப்படுத்துவதைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை. மேலும் இந்த தந்திரோபாயங்களுக்கு அப்பால் செல்ல வேண்டிய நேரம் இது. அனைத்து இலங்கையர்களின் தேவைகளையும் நிவர்த்தி செய்யும் ஆக்கபூர்வமான உரையாடல் மற்றும் நடைமுறை தீர்வுகளில் ஈடுபடுவதற்கான நேரம் இது.

நீங்கள் இதை பிரசுரிப்பதானது எமது நிலைப்பாட்டை துல்லியமாக முன்வைப்பதுடன், அனைத்து இலங்கையர்களின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மதிக்கும் நிலைப்பாட்டை வளர்ப்பதற்கு பங்களிக்கும் என நாங்கள் நம்புகிறோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# தபால் ஊழியர்கள் போராட்டத்தால் கடவுச்சீட்டு விநியோகம் பாதிப்பு




கனடாவில் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் தபால் ஊழியர்களின் போராட்டம் காரணமாக கடவுச்சீட்டு விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

கனடிய தபால் திணைக்கள பணியாளர்கள் பணி புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே கடவுச்சீட்டுக்களை தபால் மூலம் அனுப்பி வைப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சுமார் 85 ஆயிரம் கடவுச்சீட்டுக்கள் தேங்கி கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய தொழில் மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனம் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த எட்டாம் திகதி முதல் தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படலாம் என்ற அச்சத்தினால் கடவுச்சீட்டுக்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.


கடந்த 15 ஆம் திகதி முதல் ஆயிரக் கணக்கான பணியாளர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

சம்பளம், பணி சூழல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இந்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தினால் மில்லியன் கணக்கான மக்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் பாதிக்கப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த பண்டிகை மற்றும் விடுமுறை காலங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டமானது பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தபால் மூலம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பம் செய்திருந்தாலும் அந்த விண்ணப்பங்கள் கிடைப்பதற்கு காலதாமதம் ஆகும் என தெரிவிக்கப்படுகிறது.




# கனடாவில் நான்கு மாத சிசு மர்மமான முறையில் உயிரிழப்பு

கனடாவின் பகுதியில் நான்கு மாத சிசு ஒன்று மர்மமான முறையில் மரணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோவின் மிட் டவுன் பகுதியில் அமைந்துள்ள வீடமைப்பு திட்டத்தில் அமைந்துள்ள வீடொன்றில் இந்த மரணம் பதிவாகியுள்ளது.

முன்னதாக இந்த சிசு காணாமல் போனதாக குடும்பத்தினர் தெரிவித்திருந்தனர்.

எவ்வாறெனினும் பின்னர் சிசு விழுந்து கிடந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

படுகாயம் அடைந்த நிலையில் மேற்படி சிசு மீட்கப்பட்டதாகவும் மீட்கப்பட்ட சிசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

எனினும், சிசு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இந்த சிசுவின் மரணம் தொடர்பில் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.